RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt2445

# தோப்பில் முகமது மீரான் சிறுகதைகளில் பெண்களின் நிலை

நெ. விஜிலா ராணி [அ, *], த. டேவிட் [ஆ]

[அ] தமிழ்த்துறை, கிறிஸ்தவ கல்வியியல் கல்லூரி, மார்த்தாண்டம், தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி, மார்த்தாண்டம், தமிழ்நாடு, இந்தியா

# The Position of Women in Short Stories by Thoppil Mohammed Meeran

N. Vijila Rani [a, *], D. David [a]

[a] Department of Tamil, Christian College of Education, Marthandam, Tamil Nadu, India

[b] Department of Tamil, Nesamony Memorial Christian College, Marthandam, Tamil Nadu, India

* Corresponding Author: vijilaraniviji@gmail.com

Received: 02-04-2024
Revised: 24-07-2024
Accepted: 06-08-2024
Published: 15-08-2024

Check for updates

**ABSTRACT**

Women are considered to be important members of society. Women are the main reason for the development of a straight line in society. But this society has been confined by men from a certain time (after matriarchal society) to the present day. Though women's performance is excellent, society gives them a secondary place. From managing the family, which is the foundation of the society, to making the children good citizens of the society, it is the women who perform important functions. In this situation, many social reformers jumped into the fray to liberate women from the restrictions and slavery imposed by the dominant society. As a result of their struggle, we can see that today women have attained a special place in the society, though they have not attained complete independence. The creators were among those who sided with the social reformers to drive out their slavery. These literary writers express the impact of society on women and the atrocities faced by women through their works. Thoppil Mohammed Meeran was one such literary writer who fought for the emancipation of women. The purpose of this essay is to examine the concepts she has expressed about the position of women in her works.

**Keywords:** Thoppil Mohammed Meeran, Short Stories, Women, Works

## முன்னுரை

சமூகத்தில் சிறப்பிற்குரிய முக்கிய உறுப்பினர்களாகக் கருதப்படுபவர்கள் பெண்கள். சமூகம் ஓர் நேர்கோட்டின் வளர்ச்சியைப் பெறுவதற்குப் பெண்கள் முக்கியக் காரணமாக இருக்கின்றனர். ஆனால் இச்சமூகத்தை ஒரு குறிப்பிட்ட காலம் முதல் (தாய்வழிச் சமூகத்திற்குப் பின்) இன்றுவரை ஆண்கள் ஒரு வரையறைக்குள் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றனர். பெண்களின் செயல்பாடுகள் சிறப்பானவையாக இருந்தாலும் சமூகம் அவர்களுக்கு இரண்டாம்நிலை என்ற ஒரு இடத்தையேக் கொடுக்கின்றது. சமூகத்தின் அடித்தளமானக் குடும்பத்தை நிர்வகிப்பது முதல் குழந்தைகளை இச்சமூகத்தில் சிறந்த குடிமகனாக மாற்றுவது வரை போன்ற முக்கியமான பணிகளைச் செய்பவர்கள் பெண்களே ஆவார்கள் எனலாம்.

இந்நிலையில் ஆதிக்கச் சமூகம் விதித்த கட்டுப்பாடுகளிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் பெண்கள் சமூகத்தை விடுவிப்பதற்காக பல சமூகச் சீர்த்திருத்தவாதிகள் களத்தில் குதித்தனர். அவர்களின் போராட்டத்தின் விளைவாக இன்று பெண் சமூகம்

முழுச்சுதந்திரத்தைப் பெறவில்லை என்றாலும் சமூகத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதனைக் காண முடிகிறது. இவர்களின் அடிமைத்தனத்தை விரட்டுவதற்காக சமூக சீர்திருத்தவாதிகளுடன் துணை நின்றவர்களில் படைப்பாளர்களும் அடங்குவர். இத்தகைய இலக்கியப் படைப்பாளர்கள் பெண்களுக்கு சமூகம் கொடுத்த தாக்கத்தையும், பெண்கள் அனுபவித்த கொடுமைகளையும் தங்கள் படைப்புகளின் வழியே வெளிப்படுத்துகின்றன. அவ்வாறு பெண்களின் விடுதலைக்காக களம் இறங்கிய இலக்கியப் படைப்பாளர்களுள் தோப்பில் முகமது மீரானும் ஒருவர். அவர் தன்னுடைய படைப்புக்களில் பெண்களின் நிலை குறித்து வெளிப்படுத்தியுள்ள கருத்தாக்கங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## படைப்பாளர்களின் பெண்ணியச் சிந்தனைகள்

தமிழில் புனைகதைகளானது ஒரு காலகட்டத்தில் அடித்தள மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை, நடப்பியல் சார்ந்த பதிவு செய்து வந்தன. இவற்றிற்கு படைப்பாளிகளின் படைப்புச் சூழல்களும், படைப்பாளர்களின் உற்றுநோக்கும் பார்வையே காரணம் ஆகும். இவர்கள் தங்களை இச்சமூகத்திலிருந்து படைப்பாளர் என்ற முறையில் தனிமைப்படுத்திக் கொள்ளாது மக்களோடு மக்களாக வாழ்ந்து உருவாக்கம் பெற்றவர்கள் ஆவார். இவ்வாறு புனைகதைத் துறையில் நுழைந்தவர்கள் புதுமைப்பித்தன், தி.சு. செல்லப்பா, ஜெயகாந்தன், இந்திரா பார்த்தசாரதி, பொன்னீலன் போன்றவர்களாவார். இவர்களைப் பின்பற்றிய பலர் புனைகதைத் துறைக்கு அடியெடுத்து வைத்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்க இடத்தை வகிப்பவர் தோப்பில் முகமது மீரான்.

பேராசிரியர் மு. அப்துல்சமது "குடும்ப சமுதாய அமைப்புக்களில் ஆதிக்கப் போக்குகளால் பெண்ணுக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கு எதிரான வளர்ச்சி நிலைகளையும், இஸ்லாமிய சமூகப் பின்புல நாவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. பெண்கள் பெற்றுவரும் கல்வி வளர்ச்சியினால் ஏற்பட்ட முன்னேற்றங்களும், பெண்ணுரிமைப் பேணுதலில் ஆண்களிடம் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுகளும் இந்த வளர்ச்சி நிலைகளுக்கு முக்கிய காரணங்கள் எனலாம்[1] என்று குறிப்பிடுகின்றார். பெண் ஆண் வர்க்கத்தினை தனக்குள் ஐக்கியப்படுத்திக் கொண்டு வழிநடத்திச் செல்பவள் ஆவாள். மனைவியாய் - தாயாய் - மகளாய் பெண்ணின் உறவின் பங்கேற்புகள் பரிணாமம் அழகுற தம் படைப்புகளில் மொழிகிறார் மீரான்.

## குடும்ப அமைப்பில் பெண்கள்

பெண்களின் பிரச்சனைகள் குறித்த பதிவுகளை பலரும் முன்வைத்துள்ளனர். முனைவர் நா. கலைவாணி, "ஒரு பெண் திருமணத்திற்கு முன்பு பெற்றோருக்கு அடங்கியவளாகவும், திருமணத்திற்குப் பிறகு தனது குடும்ப நலனையே பெரிதும் நினைத்துக் கொண்டு வாழ்பவளாகவும் இருந்தாள் என்பது அக்கால பெண்களைப் பற்றிய மதிப்பீடு ஆகும்"[2] என்று கூறுகிறார் மணவாழ்வு, குடும்பம், கற்புநிலை, ஆணின் தனித்தன்மை ஆகியவற்றைக் கூறி, ஆண்மகன் பெண்ணை தனக்கு அடிமைப்படுத்தி இருக்கிறான். பெண்ணின் மீது செயற்கைப் பண்புகளைத் திணித்து அவளை அடக்கியும், இன்ப நுகர்வுப் பொருளாகவும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தியும் வந்திருப்பதைக் காண முடிகிறது. மேலும் பெண்கள் பிறரை சார்ந்து வாழும் நிலைமைக் குறித்து முனைவர் நா. கலைவாணி அக்காலத்தில் பெண்களுக்குப் போதுமான கல்வியறிவு கிடையாது. அது மட்டுமல்லாமல் பெண்களுக்கு பதினைந்து வயதிற்குள்ளேயே திருமணம் செய்து வைக்கின்ற நிலை இருந்தது. அதனால் அவர்கள் எதற்குமே ஆணைச்சார்ந்து வாழவேண்டியவர்களாக இருந்தார்கள்"[3] என்று குறிப்பிடுகின்றார்.

பெண்களின் பிரச்சனைகளை படைப்பில் காட்டி அதன் மூலம் பெண்களின் நிலையை சமூகத்திற்குச் சுட்டிக்காட்ட அவர்களை விடுவிக்கும் வகையில் படைப்பிலக்கியத்துறையில்

முனைப்புடன் ஈடுபட்ட படைப்பாளர்கள் பலர். இவர்களில் பிரேமாவும் குறிப்பிடத்தக்கவர். "இல்லற வாழ்வில் கணவனால் சூழப்படும் பெண்ணும் உறவுகளின் வளையங்களில் சூழ்வதுடன் சில நேரங்களில் அது அவள் கழுத்தை இறுக்கும் கயிறாகவே அமைந்து விடுகின்றது"4 என்று கூறுகின்றார். உறவுகளால் சூழப்படுவதே மனித வாழ்வு. உறவு இல்லாதவன் மனிதனே அல்ல. முனைவர் நா. கலைவாணி. |இன்றைய சூழ்நிலையில் கூட்டுக்குடும்பத்தில் வாழ்க்கைப்படும் பெண்களில் பலரும் தங்களுடைய பிரச்சனைகளை யாரிடமும் சொல்ல முடியாமல் உரிமைகளையும், உணர்வுகளையும் இழந்த நிலைந்த நிலையில் சிறைக்கைதிகள் போல் வாழுகின்ற நிலைக் காணப்படுகின்றது"5 என்று கூறுகின்றார்.

## கணவன் மனைவி உறவு

ஒரு பெண்ணிற்கு மனைவி என்ற உறவே அவளின் வாழ்வில் நிலையை நிர்ணயிக்கும் உரைகல்லாக அமைகிறது. பெண் எவ்வளவு திறமைகள் உள்ளவளாக இருந்தாலும் அவள் வாழ்வும் வளமும் கணவன் என்னும் உறவைப்பொறுத்தே அமைகின்றது என்பதை உணர்ந்த தோப்பில் முகமது மீரான் தன் படைப்புக்களான கருந்தேளின் கொடுக்குகள், தலையில் துண்டுகட்டிய பெண், கறவை தீர்ந்த மாடுகள் ஆகிய சிறுகதைகளின் வழி சமூகத்தில் மனைவியின் நிலையை இயல்பாய் வெளிப்படுத்துகிறார். சமூகத்தில் காணப்படும் மதிப்பான படிநிலை வேற்றுமை உணர்வால் குடும்ப அமைப்பில் தலைவனாக இருக்கும் கணவன் மாறிய பொருளாதாரப் பின்னணியிலும் கூட பழைய மதிப்பு நிலையிலிருந்து மாறாமல் மனைவியை அடக்கியாளுகிறான். இதனை 'குட்டி ஆடு' என்ற கதையில் ஆசிரியர் பதிவு செய்துள்ளதைக் காணலாம்.

குடும்பத்தில் இருவரின் பங்களிப்பும் சரிசமமாக காணப்படவேண்டும். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தும், ஒருவர் கருத்துக்கு மற்றொருவர் மதிப்பளித்தும் வாழவேண்டும். அவ்வாறு இணைத்து வாழுகின்ற குடும்பமே வெற்றிபெற்ற குடும்பமாகக் கருதப்படும். நா.வேலாம்மாள், "கணவனின் தனித்தன்மையை ஏற்றுக்கொள்ளும் குடும்பத்திலும், மனைவியின் ஆளுமையை ஏற்றுக்கொள்ளும் குடும்பத்திலும் இருவரும் ஒருவருக்கொருவர் இணையாள உரிமை கொடுத்து வாழும் குடும்பத்திலும் கணவன் மனைவி உறவில் சிக்கல் எழுவதில்லை"6 என்று குறிப்பிடுகின்றார். கணவனின் போதிய வருமானமின்மையைப் புரிந்து கொள்ளாத மனைவி "வெறித்துப் பார்த்தாள் என்னை. அந்தப் பார்வை அனலில் தோல் கொப்புளங்கள் உண்டாயின. பெண் முகத்திற்கு இவ்வளவு கவர்ச்சி அழகையும், இவ்வளவு நடுங்கச் செய்யும் சீற்றத்தையும் கொடுத்த படைப்பாளியின் படைப்புத்திறனை பாராட்டமலிருக்க முடியவில்லை" (தோ.மு.மீ.க.2. ப.232) என்று 'காலத்தின் ஆவர்த்தனம் கதையில் மனைவியின் நிலையை விளக்குகிறார். மனைவியானவள் குடும்பத்தையே தாங்கி நிற்கின்ற ஆலமரமாக விளங்குகின்றாள் என்பதை தனது படைப்பின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

## அடிமைத்தனம்

பெண்கள் தன் குடும்பத்தின் உறுப்பினர்களை அடக்கியாளும் தன்மை பெற்றவள். கணவன் பொருள் ஈட்டி வரவேண்டும். மனையாள் அப்பொருளில் தன் குடும்பத்தை நிர்வகித்தல் வேண்டும். இல்லத்தில் பணி செய்பவர்களிடம் அதிகாரத்தொனியில் பேசும் தன்மை இருக்க வேண்டும். முனைவர் நா. கலைவாணி, "ஒரு பெண்ணிற்கு எத்தனைச் சிக்கல்கள் வந்தாலும் ஒரு பொருட்டாகவே நினைப்பதில்லை"7 என்று குறிப்பிடுகின்றார். மனைவியின் பேச்சில் காணப்பட வேண்டிய அதிகாரத் தொனியை 'நரகம் பூமியில்' எனும் சிறுகதையில் வரும் பாத்தே (லைலா) என்ற வேலைக்கார பெண்ணை அடக்கி ஆளும் தன்மையைக் காணமுடிகிறது. இதனை, 'திடீரென்று அங்கு உம்மா வா, என் பார்வை நிலத்தில் படர்ந்தது. நடுநடுங்கி நின்றாள் பாத்தே, உம்மாவின் கண்களில் தீக்கனல் தெறித்தது" (தோ.மு.மீ.சி.தொ.1.ப.26) என்று அம்மாவின் அதட்டல்

வேலையாளை மிரள வைக்கிறது என்பதன் வாயிலாக அனைவரையும் அடக்கி வைத்திருக்கும் பெண்மையைப் பற்றி சிறுகதையில் காணமுடிகின்றது.

## முதுமையில் பெண்மை

முதுமை என்பது வாழ்வின் எல்லா நிலைகளையும் கடந்து வாழ்வின் இறுதிநிலையை எட்டுவதாகும். மனிதன் ஒவ்வொருவனுக்கும் ஓர் அச்சத்தை உண்டாக்கக் கூடிய பருவம் முதுமைப்பருவம் ஆகும். முதுமைக்காலத்தில் தான் பிறரிடமிருந்து அன்பை எதிர்பார்க்கும் நிலை அதிகரிக்கும். முதுமைக்காலத்தில் பெற்றோர்களை அரவணைக்க வேண்டியது பிள்ளைகளின் கடமையாகும். முனைவர். நா. கலைவாணி, "பெண்ணுரிமை, முன்னேற்றம், பெண்களுக்கு சம அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்றெல்லாம் மேடை போட்டு முழங்கும் ஆண்கள் தங்களது வீடுகளில் உள்ள பெண்களுக்கு முழுச் சுதந்திரமும், மதிப்பும் கொடுப்பதில்லை"[8] குறிப்பிடுகின்றார். ஆனால் இன்று சமூகத்தில் முதுமை மக்கள் பல வகைகளில் இன்னல்களுக்கு ஆளாகி வருகிறார்கள். கிராமங்களில் வயதான பெரியவர்களுக்கு மரியாதை கொடுப்பதும், அவர்களின் அறிவுரையைக் கேட்பதும் இன்று குறைந்து வருகிறது. இதனை தோப்பில் முகமது மீரான், 'கத்தச் சோறு', 'அன்புக்கு முதுமையில்லை', துறைமுகம், ஒரு தெருவின் சுயசரித்திரத்திலிருந்து, பேரன், வாரிசு, களியோடக்கா, பண்டமாற்று, தங்கவயல், சன்னதியில் போன்ற சிறுகதைகளில் முதுமைக் காலத்தில் தனக்கென்று ஒரு இடத்தைத் தேடி அலையும் மனநிலையினையும் அதனால் ஏற்படும் துன்பங்களையும் பிரதிபலிக்கின்றார்.

## முடிவுரை

தோப்பில் முகமது மீரான் சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனைகள் மிகுந்து காணப்படுகின்றன. இன்றைய சூழல்களில் பெண்களுக்கு ஏற்படும் குடும்ப சிக்கல்கள், முதுமையில் கொடுமை, ஆணாதிக்க வன்முறைகள், வரதட்சணைக் கொடுமைகள் முதலியனவற்றை வன்மையாக சாடியிருக்கிறார். குடும்பத்தினரின் தேவைகள் எல்லாம் புரிந்து கொண்டு பணிவிடை செய்யும் பெண்கள் எப்படியெல்லாம் ஒடுக்கப்படுகின்றார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றார். பெண்கள் குழந்தைபேறின்மை காரணமாகவும் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாகும் அவலம் காணப்படுகின்றது. ஆணாதிக்க போக்குகளால் பெரும்பாலான பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு காண்படுகின்ற பெண்களின் அறியாமையைப் போக்கி, பெண் விடுதலைக்குக் குரல் கொடுக்கும் மனிதராக தோப்பில் முகமது மீரான் விளங்குகிறார் என்பதில் சிறிதும் ஐயமில்லை என்று கூறலாம். பெண்கள் நாட்டின் கண்களாக மதித்துப் போற்றப்படுதல் வேண்டும். பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் நீங்க பாடுபட வேண்டும். திருக்குறள் ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒத்த உரிமையைத் தான் வழங்கி இருக்கிறது. இவ்வாறு போற்றி பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் பெண்கள் என்பது இக்கட்டுரை மூலம் புலனாகிறது.

## References

இஸ்லாமிய தமிழ் புதினங்கள் சித்தரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும்

இரா. பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள்

நா. வேலம்மாள், தமிழ் நாவல்களில் பொருளாதார சிக்கல்கள்

நா. கலைவாணி, தமிழ் புதினங்களில் ஒடுக்குதலும், பிரச்சனைகளும்

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author's 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License